1994 மே 4]

507—

காளிங்கராயன் வாய்க்கால் பாசனத்தைச் சீரமைத்தல்.

*12106—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காளிங்கராயன் வாய்க்காலில் அங்கீகாரம் செய்யப் படாத பம்புசெட் மூலம் தண்ணீர் எடுத்து பாசனம் செய்வதால், அதிகபட்ச கடைக்கோடி பாசன விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்தப் பாசன முறையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காளிங்கராயன் வாய்க்கால் சீரமைக்கும் திட்டம், 1974 ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்டு, மதகு சீரமைக்கும் பணியைத் தவிர மற்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், காளிங்கராயன் வாய்க்காலில் அனுமதியின்றி பொருத்தப்பட்டுள்ள பம்பு செட்களை முறைப்படுத்தக் கூடாது என அரசு முடிவெடுத்து ஆணைகள் வெளியிட்டுள்ளது.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காளிங்கராயன் வாய்க்கால், அரக்கன் கோட்டை, தடப்பள்ளி வாய்க்கால் போன்ற வாய்க்கால்களிலே பம்பு செட்டுகளை வைத்து, 20 எச்.பி., 30 எச்.பி. என்று அடிஷனல் லோட் வாங்கி, தண்ணீரை எடுத்துக் கொள்கிறார்கள். இன்றைக்கு கீழ் பவானி வாய்க்காலுக்கு குறிப்பிட்ட தண்ணீர்தான் பவானி ஆற்றில் திறந்து விடுகிறார்கள். அந்தத் தண்ணீர் பாசனப் பகுதிகளுக்குச் செல்லாமல், அன் ஆதரைஸ்டு பம்பு-செட் வைத்து இயக்குவதால், ஆயக்கட்டு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே கடுமையானதொரு சட்டத்தின் மூலமாக அவற்றை அப்புறப் படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காளிங்கராயன் வாய்க்கால் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள காளிங்கராயன் அணைக் கட்டிலிருந்து ஆற்றின் வலதுபுறம் பிரிந்து, ஏறத்தாழ 16,000 ஏக்கர் பதிவு பெற்ற பாசன நிலங்களுக்கு பாசன வசதி செய்யப்படுகிறது. இந்த 66 கிலோ மீட்டர் வாய்க்காலையும் சீரமைக்க, அதில் 787 மதகுகள் இருப்பதால், அந்த 787 மதகுகளை 226 மதகுகளாக மாற்றி அமைக்கின்ற திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்த போது, விவசாயிகளின் கடும் எதிர்ப்பு காரணமாக அந்தப் பிரச்சினை கைவிடப்பட்டது. அன்-ஆதரைஸ்டாக தண்ணீரை எடுக்கின்றவர்களைப் பொறுத்த மட்டில் அரசு ஒருபோதும் அனுமதி அளித்தது கிடையாது. ஆகவே கடைக்கோடி பகுதிகளுக்குக்கூட இதுமாதிரி பிரச்சினை வருகிற போது நியாயமான ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவேதான் நம்முடைய அரசின் சார்பில் அது சம்பந்தமாக முறைப்படுத்தப்படாத நீர் இறைக்கும் அளவில் தண்ணீர் எடுக்கிறவர் மீது எல்லாம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அது சம்பந்தமாக பொதுப் பணித் துறை மற்றும் மின்சாரத்துறை அதிகாரிகளுக்கு ஆணை இடப்பட்டிருக்கிறது. அவர்கள் அது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். பொதுவாக முறைப்படுத்தப்படாத அளவில் தண்ணீர் எடுக்கிறவர்களை இந்த அரசு ஒரு போதும் அனுமதிக்காது. அதற்கு இந்த அரசு எந்த விதமான இடமும் தராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 508, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

508—

திருத்துறைப்பூண்டி— மன்னார்குடி வரை தார்ச்சாலையை அகலப்படுத்துதல்.

* 14013— திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் — காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி முதல் மன்னார்குடி வரையுள்ள குறுகிய தார்ச் சாலையை அகலப்படுத்துவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?